பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 24 | சனிக்கிழமை | 10.01.2026 | அதிர்வு 163

### தெஹிவளையில்

## ஹோட்டல் உரிமையாளர் நேற்று சுட்டுப் படுகொலை



கொழும்பு, தெஹிவளை – மெரைன் ட்ரைவ் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் சுட்டுப் படுகொலை 05




# கருத்து வேறுபாடு இருந்தாலும் பலமாக இருக்கின்றது தமிழரசு


### தலைவர் சி.வி.கே. முரசின் ‘INSIDE’ நிகழ்ச்சியில் தெரிவிப்பு

*(எஸ்.நிதர்ஷன்)*

“இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அதை நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். எமது கட்சி பலமாக இருக்கின்றது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். 06

# வடக்கு நோக்கி நகர்கின்றது காற்றழுத்த தாழ்வு மண்டலம்



### மக்களே மிகவும் அவதானமாக இருங்கள் என்று பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை

வங்காள விரிகுடாவில் திருகோணமலைக்கு கிழக்காக 80 கி.மீ. தொலைவில் காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ச்சியாக வடக்கு நோக்கி நகர்ந்து வருகின்றது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“நேற்று காலை 9.00 மணியிலிருந்து இதனுடைய நகர்வு வேகம் மிக மிக குறைவாகவே (மணிக்கு 3 – 5) இருந்தது.

இது இன்று காலை முல்லைத்தீவுக்கு அண்மித்து வடக்கு மாகாணத்தின் நிலப் பகுதியில் நுழைந்து பின்னர் 06




ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தமக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று பிணையில் விடுவிப்பு பெற்றிருக்கிறார்.

ஆயுதங்கள் தொடர்பான வழக்கில் நீதிவான் நீதிமன்றத்தில் பிணை பெறுவது பெரும்பாலும் சாத்தியம் அல்ல என்பதை நேற்று என் பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தேன். அப்படி இருந்தும் டக்ளஸ் தேவானந்தா இந்த ஆயுத நெருக்கடி வழக்கில் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்தமைக்கு முக்கியமான இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று – டக்ளஸ் தேவானந்தா கைதான சமயத்திலேயே அது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இந்த விடயத்தில் அதிகம் நோண்டித் துளாவப் போனால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்படும், யுத்த காலத்தில் துணைப் படைகளை வைத்து இயக்கிய விடயம் உட்பட பல விவகாரங்கள் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் வரை பூமராங் ஆக எதிரொலிக்கும் சாத்தியம் 06

# பிரதமர் ஹரிணியுடன் நேற்று தமிழரசு எம்.பிக்கள் சந்திப்பு!



(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறீதரனின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது நேற்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையிலேயே நேற்று காலை 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இதன்போது தமிழ் மொழி மூல வரலாற்று நூல்கள் மற்றும் பாடத்திட்டங்களில் தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட்டுள்ளமை பற்றி பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவற்றை மீண்டும் பாடப்புத்தகங்களில் கொண்டுவரவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களை இந்த விடயத்தில் தொடர்புபடுத்தி வரலாற்றுத் தகவல்களைத் தொகுத்து அவற்றைத் தமிழ்மொழி மூலப் பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்ய இதன்போது பிரதமருக்கு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் தமிழ் வரலாறுகள் பாடத்திட்டங்களில் உள்ளீர்ப்பு செய்யப்படும் என்று பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் மற்றும் தரம் - 01 இற்கான பாடப்புத்தகங்களில் அதிக எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன என்று இதன்போது பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவற்றையும் விரைவாகத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கும்போது அவை ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு பின்னர் மொழி மாற்றம் செய்யப்பட்டே தமிழுக்கு மாற்றப்படுகின்றது. அதில் குறிப்பாக உயிரியல் பாட வினாத்தாள்கள். அவ்வாறு மொழி மாற்றம் செய்யும் போது நிறையப் பிழைகள் ஏற்படுகின்றன. மொழி மாற்றத்தில் காணப்படும் சிக்கலினால் பரீட்சைப் பெறுபேறுகளிலும் அதிக தாக்கம் ஏற்படுகின்றது. இந்த விடயத்துக்கும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெவ்வேறு திட்டங்களினூடாக அமைக்கப்பட்ட பல பாடசாலை கட்டடங்கள் இன்னும் பூரணப்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றில் சில ஆபத்தான நிலையில் இடிந்துவிழும் நிலையில் மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளன.அவற்றைப்பூரணப்படுத்தநடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது.

இங்கு பதிலளித்த பிரதமர், கடந்த வருடம் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி பெருமளவில் பாவிக்கப்படாது மீண்டும் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இவ்வருடம் உரிய அதிகாரிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நேரடியாகத் தலையிட்டு மேற்படி விடயங்களுக்கும் குறித்த நிதியைப் பயன்படுத்தவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கூறினார்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்ப குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கற்கை நெறியைக் கடந்த 8 மாதங்களாக தமிழ் மொழி மூலம் கற்று வருகின்றவர்கள் அதற்கான பரீட்சையை ஆங்கில மொழியில் எழுத வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகின்ற விடயம் தொடர்பில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனை அக்கறையோடு கேட்டுக் கொண்ட பிரதமர் விடயத்தைக் குறிப்பெடுத்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் பெருந்தொகை ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும் பிரதமருடன் பேசப்பட்டது. வடக்கில் தமிழ் மொழி மூலம் 3 ஆயிரத்து 771 வெற்றிடங்களும், சிங்கள மொழி மூலம் 68 வெற்றிடங்களும், கிழக்கில் 5 ஆயிரத்து 854 வெற்றிடங்களும் நிலவுகின்றன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்த வருட ஆசிரிய நியமனங்களின்போது இயலுமானவரை இந்த வெற்றிடங்களை நிரப்பத் தாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் தெரிவித்தார்.

மேற்படி முக்கிய விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன், மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகம் குகதாசன், ஞானமுத்து சிறீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், துரைராசா ரவிகரன், மருத்துவர் சிறீநாத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# சீன வெளிவிவகார அமைச்சர் நாளை இலங்கை வருகின்றார்

## உறுதிப்படுத்தியது அரசு



சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி நாளை (11) ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ளார் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தினார்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை சீன வெளிவிவகார அமைச்சர் தன்னைச் சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் அவர் கூறினார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே இலங்கை வருவார் என முன்னதாகத் தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையிலேயே சரியான திகதி விவரத்தை வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரையும் சீன வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார்.










# 2026 ஆம் ஆண்டில் 55 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும்

## ஜனாதிபதி அநுர உறுதி

இலங்கை வரலாற்றில் அரச அனுசரணையின் கீழ் அதிகளவான வீடுகள் நிர்மாணிக்கப்படும் ஆண்டாக 2026 ஆம் ஆண்டு அமையும் ஈன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரையிலான புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படும். வீடமைப்பு அதிகார சபையால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட 31 ஆயிரம் வீடுகளுடன் சேர்த்து, இந்த ஆண்டில் மட்டும் மொத்தம் 55 ஆயிரம் வீடுகள் வரை நிர்மாணிக்கப்படும்." – என்றும் ஜனாதிபதி கூறினார்.

டித்வா சூறாவளியால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை மீண்டும் நிர்மாணிக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக, முற்றிலும் வீடுகளை இழந்து அதே இடத்தில் மீண்டும் கட்டக்கூடிய குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

அதன்படி, அனுராதபுரம் மாவட்டத்தின் கல்னேவ, பலகல, பலுகஸ்வெவ, இபலோகம மற்றும் திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் முற்றிலுமாக சேதமடைந்த 26 வீடுகளைப் புனரமைப்புக்கான இழப்பீடு நேற்று வழங்கப்பட்டது.

அத்துடன், புதிய வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் ஜனாதிபதியின் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

"இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், இவ்வளவு பாரிய நட்டஈடு வழங்கி மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை கடந்த ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை.

அனர்த்தத்துக்கு முகம் கொடுத்த மக்களுக்கு அவர்கள் முன்பு இருந்ததை விடவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றும் ஜனாதிபதி கூறினார்.

அதேபோல், மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்க வேண்டுமாயின், சிறந்த வருமானம், பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி, ஆரோக்கியமான வாழ்க்கை, ஒரு நல்ல வீடு மற்றும் மன அமைதி ஆகியவை அவசியம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்த 5 விடயங்களையும் நிறைவேற்றுவதற்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.












# உயிரைத் தவிர இழந்த ஏனைய அனைத்தையும் வழங்குவோம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

அனர்த்தத்தால் இழந்த உயிர்களை மீண்டும் பெற முடியாவிட்டாலும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க அரசு அனைத்து ஆதரவையும் வழங்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்தத்தை எதிர்கொண்ட மக்களுக்கு, முன்னர் இருந்ததை விட சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதே தனது குறிக்கோள் என்றும் அவர் கூறினார்.

அதற்கான வலுவான திட்டம் தற்போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், அந்த மக்களை 2048 ஆம் ஆண்டு வரை காத்திருக்கச் சொல்லப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

டித்வா சூறாவளியால் முழுமையாக வீடுகளை இழந்த குருநாகல் மாவட்ட மக்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் மற்றும் இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பேரழிவிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று சிலர் எதிர்பார்த்தாலும், தற்போது கணிசமான அளவுக்கு நாட்டையும் மக்களின் வாழ்க்கையையும் மீட்டெடுக்க அரசுக்கு முடிந்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் எந்தவொரு அனர்த்தத்தையும் எதிர்கொள்ளக்கூடிய வகையில் இந்த நாட்டுப் பொருளாதாரத்தை வலுவாகக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்.” – என்றார்.






# கொழும்பில் கலாமித்ரா விருது விழா

கலை, இலக்கிய மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்குக் களம் அமைப்பதைப் பிரதான செயற்பாடாக் கொண்டு தலைநகரில் கடந்த 45ஆண்டுகளாக பணியாற்றி வரும் புதிய அலை கலை வட்டம் வரும் ஜனவரி 30ஆம் திகதி 46ஆவது ஆண்டுக்குள் காலடி பதிக்கின்றது.

பணிகளின் வரிசையில் 1995ஆம் ஆண்டு முதல் இளையோருக்கான கலை,கலாசாரப் போட்டிகளை நடத்தி விருதளித்து ஊக்குவித்து வரும் இந்த அமைப்பு இதன் 20ஆவது ஆண்டின் தொடராக கலாமித்ரா விருது விழாவை வரும் 30 ஆம் திகதி கொழும்பு - 11 செட்டியார் தெருவில் அமைந்துள்ள கல்யாண முருகன் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடத்துகின்றது.

இந்த விழாவுக்கு அமைப்பின் நிறுவனர் ராதாமேத்தா தலைமை ஏற்கின்றார்.

இதில் பிரதம அதிதியாக ஹாசிம் உமர் பவுண்டேஷன் அமைப்பின் நிறுவனர் ஹாசிம் உமர் கலந்துகொள்கின்றார்.

இந்த நிகழ்வினில் கலை, கலாசாரப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற 25 பேருக்கு வெற்றியாளர் விருதும், கலை, இலக்கிய படைப்பாக்கங்களில் தொடர்ந்து பங்களிப்புச் செய்து வரும் பத்து துறைகளைச் சார்ந்த பத்து பேருக்கு கலாமித்ரா விருதும், சமூக மற்றும் கலை ஊடகப் பணிகளில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் 15 பேருக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.




இந்த நிகழ்வு புதிய அலை கலை வட்டத்தின் பிரதம நிர்வாகத்தின் தலைவர் ஷண்மு, செயலாளர் சி.அழகேஸ்வரன் மற்றும் பொருளாளர் ரவிராம் ஆகியோரின் ஏற்பாட்டில் ஒருங்கமைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் சீனாவுக்குப் பயணம்!

## உத்தியோகபூர்வ விஜயமாக எதிர்வரும் 26 இல் புறப்படுகிறார்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் உததியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 26 ஆம் திகதி சீனாவுக்குப் பயணிக்கவுள்ளார். பெப்ரவரி 6 ஆம் திகதிவரை அங்கு நடைபெறும் நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ளவுள்ளார்.

டிஜிற்றல் பொருளாதார பரிபாலனம் மற்றும் தலைமைத்துவ ஆளுமையைக் கட்டியெழுப்பும் சர்வதேச பரிமாணங்களுக்கான நிகழ்வுகள் சீனாவில் இடம்பெறவுள்ள நிலையில் அதில் கலந்து கொள்வதற்காக அவர் சீனாவுக்குப் பயணமாகவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் கல்வி நிறுவகத்தால் உலக டிஜிற்றல் பொருளாதார நகரங்கள் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதில் இலக்கு, நோக்கங்கள், அரசின் முன்னுரிமைகளுக்கு இணங்கியதாக மிகவும் நெருங்கியதாகக் காணப்படுகிறது. சிமாட் சிற்றி அபிவிருத்தி பரிபாலனத்தை பலப்படுத்தல் மற்றும் சேவை வழங்கும் உத்திகள் தொடர்பிலும் உள்ளூராட்சி அரசுகளுடன் பேசப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கையில் இருந்து முதல்வர்கள், பிரதி முதல்வர்கள், ஆணையாளர்கள், செயலாளர்கள், பணிப்பாளர்கள் என 19 பேர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஹோட்டல்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

ஹோட்டலின் உரிமையாளர் படுகாயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்டு என்பதைக் கோடி காட்டி இருந்தேன். ஆகையினால்வந்தவேகத்தில்அரசு நழுவிக் கொள்ளும் சாத்தியம் எதிர்பார்க்கப்பட்டதே.

இந்த வழக்கில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவை வழங்குவதற்கு அரசியல் தலைமை மறுத்துவிட்டது என்பதும், தேவையானால் உடனடி நடவடிக்கைக்காக என்ற கோதாவில் 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு மட்டுமே அரசியல் தலைமையால் அனுமதிக்கப்பட்டது என்பதும் நோக்கத்தக்கவை.

இந்த விவகாரத்தில் டக்ளஸை சிக்கலில் மாட்டி, நீதிமன்றத்தில் அவர் வெளிப்படையாகக் கருத்துக் கூற வைப்பது கடந்த மூன்று தசாப்தங்களாக தென்னிலங்கை சிங்கள அரசோடு ஒன்றுபட்டு நின்று விடுதலைப் புலிகளின் போராட்டத்தை எதிர்கொண்ட ஓர் இயக்கத்தை அரசுக்கு எதிராக திருப்பும் தற்குறித்தனமாகிவிடும் என்று அரசு தலைமைக்கு ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கின்றமையையும் நேரத்துடன் கோடி காட்டி இருந்தேன்.

டக்ளஸ் தேவானந்தாவை தொடர்ந்து விளக்க மறியலில் தடுத்து வைக்க பாதுகாப்பு தரப்பு நீதிமன்றத்தில் ஒற்றைக் காலில் நிற்காமல் தவிர்த்தமைக்கு இது ஒரு காரணம் என்றாலும், மற்ற முக்கிய காரணம் நேற்று நீதிமன்றத்தில் அவர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் முன்வைத்த ஆணித்தரமான வாதங்களாகும்.

சுமார் 40 நிமிட நேரம் சிங்களத்திலும் அவ்வப்போது ஆங்கிலத்திலும் அவர் முன்வைத்த வாதங்கள் பெரும்பாலும் டக்ளஸுக்கு எதிரான வழக்கின் பிரதான விடயங்களையே தவிடு பொடி ஆக்கிவிட்டன என்பதுதான் முக்கிய அம்சமாகும்.

'சர்ச்சைக்குரிய ரிவோல்வர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அளிக்கப்பட்டது அல்ல, அவர் சார்ந்த கட்டமைப்புக்கு அளிக்கப்பட்டது. அந்தக் கட்டமைப்பு இலங்கை அரசுடன் சேர்ந்து தீவிரவாதத்திற்கு எதிராக துணிச்சலுடன் போராடியது. அந்தக் கட்டமைப்பு இழந்த ஆயுதத்திற்காக அந்தக் கட்டமைப்பின் தலைவர் பதில் கூற வேண்டும் என்று அவரை விளக்கமறியலில் வைப்பதாயின், இந்த யுத்த காலத்தில் அரச இராணுவமும் பல ஆயுதங்களை இழந்திருக்கின்றது, அவையும் பயங்கரவாதிகளிடமும் பாதாள உலகம் குழுவினரிடமும் சென்றிருக்கின்றன, இப்போது டக்ளஸை கைது செய்து விளக்க மறியலில் வைப்பதாயின், அப்போது இராணுவத்தின் தளபதிகளாக இருந்தவர்களும், அப்போதைய பாதுகாப்பு அமைச்சரும் கூட அந்த ஆயுதங்கள் இழக்கப்பட்டமைக்கும், காணாமல் போனமைக்கும் பதில் கூறுவதற்காக விளக்க மறியலில் வைக்கப்பட வேண்டும்' என்ற சாரப்பட ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மன்றில் தெரிவித்தார்.

அரசுக்காக செயற்பட்டு பல முறை உயிராபத்தை எதிர்கொண்ட டக்ளஸ் தேவானந்தா, அரசப் பிரதிநிதியாக சிறைச்சாலைக்குள் போன சமயம் மோசமாகத் தாக்கப்பட்டமையை விவரித்த சட்டத்தரணி, அவர் சிறைக்குள் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவரது உயிருக்கு ஆபத்தானது என்பதை விளக்கினார்.

அவர் கடந்த காலத்தில் இலங்கை அரசுக்கு ஆற்றிய பணிகளையும், அதற்காக தன்னை ஆபத்தில் அவர் ஆழ்த்திக் கொண்ட விடயங்களையும் சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் விலாவாரியாக விவரித்த பின்னர், டக்ளஸ் தேவானந்தாவை தொடர்ந்து விளக்க மறியலில் வைத்திருக்க வேண்டும் என்ற கோரிக்கையை குற்றப் புலனாய்வு தரப்பினர் நீதிமன்றத்தில் வலியுறுத்தவே இல்லை என்பது முக்கியம் விடயமாகும்.

ஒன்று – ஈ.பி.டி.பி. கட்டமைப்புக்கு வழங்கிய ஆயுதம் தவறியமைக்காக அதன் தலைவரை சிறை வைக்க முடியாது என்ற வாதம். நிச்சயமாக இது நீதிவானின் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கும் என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

அடுத்தது – இந்த ரிவால்வர், அது வழங்கப்பட்ட சமயம் அதன் பெறுமதி 25,000 ரூபாவுக்கு அதிகம் என்பதை நிரூபிக்கும் எந்த ஆவணமும் மன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக் காட்டிய விடயம். 25,000 ரூபாவுக்கு குறைந்த நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டமைக்காக ஒருவரை தொடர்ந்து விளக்கம் மறியலில் வைக்க முடியாது என்ற ஜனாதிபதி சட்டத்தரணியின் வாதமும் டக்ளஸுக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்ட நீதவானின் கருத்தியலில் முக்கிய விடயமாக இருந்திருக்கும் என்று கருதப்படுகிறது.

போராட்டத்தை எதிர் கொள்ளும் சமயம் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் குழுக்களில் டக்ளஸ் தேவானந்தாவின் கட்டமைப்பு மட்டுமே இறுதி வரையில் அந்த நிலைப்பாட்டில் மாறாமல் நின்றது என்பதையும் அவரின் சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

இனி வழக்கு நீண்ட காலம் இழுபடும். ஆயினும், இந்த விவகாரத்தில் டக்ளஸ் தேவானந்தாவை மேலும் துருவி, அவர் வாயைக் கிளறி, ஜெனிவா உட்பட பல தளங்களில் தனக்கு சிக்கல் ஏற்படுவதை கொழும்பு முன்னெடுக்காது என்று நினைக்கிறேன்.

*   *   *

தமிழக அரசு வருடம் தோறும் முன்னெடுக்கும் அயலக தமிழர் தினம் நாளையும் மறு தினமும் சென்னை கிண்டியில் நடைபெறுகிறது.

அதில் பங்குபற்றுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகியோரை தமிழக அரசு விசேட சிறப்பு அதிதிகளாக அழைத்து இருக்கின்றது.

அதில் பங்குபற்றுவதற்காக சுமந்திரன் இன்று சென்னை செல்கின்றார். விக்னேஸ்வரன் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிகிறது. கஜேந்திரகுமார் நோர்வே சுற்றுப்பயணத்தில் இருப்பதால் பெரும்பாலும் இந்த நிகழ்வில் பங்கு பற்ற மாட்டார் எனத் தெரிகின்றது.

மேலும் இலங்கையிலிருந்து பிரதி மைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றுவார்கள் எனத் தெரிகின்றது.

வருடாந்தம் நடைபெறும் இந்த மாநாட்டில் முன்னரும் சுமந்திரன் உட்பட பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர் என்பது தெரிந்ததே.

---

## வடக்கு நோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தினூடாக பாக்குநீரிணைக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும்

கிடைத்து வரும் தூறல் மற்றும் மிதமான மழை (நேற்று இரவு முதல்) படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று காலை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 40 கி.மீ. என்ற அளவில் உள்ளது. அதேவேளை உள்நிலப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 30 கி.மீ. என்ற அளவில் உள்ளது. இது படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் கடல் மிக கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதனால் சில இடங்களில் கடல்நீர் உள்வரும் செயற்பாடும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தநிலை இன்று மாலை வரை நீடிக்கும்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் குளிரான காலநிலை நிலவுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தின் ஊடாக ஈரப்பதனை உள்ளிழுப்பதனாலேயே இந்தக் குளிரான நிலைமை காணப்படுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேறியதன் பின் குளிர் குறைவடையும்.

எனவே, இந்த நிலைமைகள் தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம்.

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும். ஆனால், சில பகுதிகளுக்குச் சற்று கனமான மழை கிடைக்கும். காற்றும் சற்று உயர்வான வேகத்தில் வீசும்." – என்றார்.

---

## கருத்து வேறுபாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"முரசு" ஊடகத்தின் தயாரிப்பான 'INSIDE' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சமகால அரசியல் நிலைமை குறித்து விரிவாகப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்துக்கு எதிரான வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனினும், எமது கட்சி சுமுமாக இயங்குகின்றது. வழக்கு விசாரணையின் இறுதியில் நீதித்துறை என்ன சொன்னாலும் நாம் எல்லோரும் அதற்குக் கட்டுப்பட்டு இயங்குவோம்.

தமிழரசுக் கட்சிக்குள் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அதை நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். கட்சியை உடையாமல் பார்ப்பது என்னுடைய தனிப்பட்ட முயற்சி. இதுவரை அதில் நான் வெற்றி கண்டிருக்கின்றேன் என்றுதான் நினைக்கின்றேன்.

வழக்கு முடிவடைகின்றபோது தீர்ப்பின்படி நாம் செயற்படுவோம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எமது கட்சி பலமாக இருக்கின்றது." – என்றார்.

**இந்த நிகழ்ச்சியில், தமிழரசுக் கட்சியின்தலைவர் சி.வி.கே. சிவஞானம், முக்கிய அரசியல் கேள்விகளுக்கு நேரடியான பதில்களைத் தெளிவாக வழங்கினார். அவருடனான முழு நேர்காணலை காணொளியில் தவற விடாமல் பாருங்கள்.**

CLICK HERE VIDEO

# ஊடகவியலாளர்கள் கொலைக்கு நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்!

## சபையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி



“இந்நாட்டில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்.” – என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய ரவி கருணாநாயக்க எம்.பி.,

“ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ளன. அவர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கூட பதில் வழங்கப்படுகின்றது. இது விடயத்தில் ஏன் இப்படி நடக்கின்றது.” – என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

“ஊடகவியலாளர்கள் படுகொலை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் தொடர்பில் அரசின் நிலைப்பாடு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி கொலையாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவியவர்களைக் கண்டறிவதற்கும், நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.” – என்றார்.

# வல்வெட்டித்துறையில் “லஞ்ச் சீற்” பாவிக்கத் தடை பயன்படுத்தும் உணவகங்களது உரிமம் இரத்தாகும்!

## அறிவித்துள்ளது வல்வெட்டித்துறை நகரசபை




வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்கு உட்பட்ட உணவகங்களில் “லஞ்ச் சீற்” பயன்படுத்த முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதனை மீறி செயற்படும் உணவகங்களின் வியாபார உரிமம் இடைநிறுத்தப்படும் என்று வல்வெட்டித்துறை நகரசபை அறிவித்துள்ளது.

வல்வெட்டித்துறை நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வழிகாட்டுதலில் நகராட்சி மன்றத்தின் எல்லைக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களது உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்சீற் பாவனையை முற்றாகத் தடை செய்யும் முகமாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொது மண்டபத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

உபதவிசாளர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சகல உணவு கையாளும் நிலையங்களிலும், திருமண மண்டபங்களிலும், அன்னதான மடங்களிலும் லஞ்சீற் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அதனை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வியாபார உரிமம் இடைநிறுத்தப்படும் எனவும் கூறப்பட்டது. குறித்த நடைமுறை உடனடியாக அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் அவகாசம் வழங்கப்படும் எனவும் ஜனவரி 16 முதல் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்சீற் பாவனை தடை தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரமும் இதன் போது உணவக உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதன் போது 2026 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமங்கள் மார்ச் 31 இற்கு முன்னர் அனைவரும் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப. தினேஸ் கலந்துகொண்டு உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

வடக்கு மாகாணத்தில் “லஞ்ச் சீற்” பாவனையை முற்றுமுழுதாக தடை செய்வதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் கடந்தமுதலாம் திகதி தொடக்கம் பருத்தித்துறை நகரசபை அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கத்து.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பண்பாட்டுப் படுகொலை

ஈழத் தமிழினத்துக்கு எதிராக பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கு அரசுப் பீடம் மேற்கொண்ட பண்பாட்டுப் படுகொலையின் 52 ஆவது ஆண்டு நிறைவில் - நினைவில் - இன்று நிற்கிறோம்.

ஈழத்தில் தமிழர்கள் தங்கள் இனத்தின் பெருமை பேசும் ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியைத்தானும் அரசின் தலையீடு இல்லாது தாமே சுதந்திரமாக நடத்தவியலாதவாறு ஒடுக்கப்பட்டு வருதலை, உலகின் மனச்சாட்சிக்கு உறுத்திய முதல் வலாற்றுப் பதிவாக நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் மீது பௌத்த - சிங்களப் பேரினவாதம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான படுகொலைத் தாக்குதல் நமக்கு நினைவூட்டி நிற்கின்றது.

அந்த அட்டூழியத்தின் நினைவழியா ஆண்டு நினைவேந்தல் நாள் இன்று.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக, பேரெழுச்சியோடு தமிழர் தேசம் இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவைக் கொண்டாடியமையைச் சகிக்க முடியாத பேரினவாதம், மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது, திரண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் கூட்டம் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு, வன்முறையை ஏவி விட்டு ஒன்பது அப்பாவிகள் படுகொலை செய்யக் காரணமாயிற்று.

ஈழத் தமிழர் தேசத்தின் மனத்தில் - ஆன்மாவில் - நீங்காத வடுவாக, ஆழமான ரணமாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதிந்து போனது என்பதும், அதுவே தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் பின்னர் மடை திறந்த காட்டாற்று வெள்ளாமாகப் பெருக்கெடுத்துப் பேரெழுச்சி கொள்ளத் தூண்டுகோலாகிவித்திட்டது என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய ஈழத்தில், இஸ்லாமியத் தமிழ், கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களால் செழுமை பெற்ற தமிழர் தாயகத்தில், தனித்துவமான பண்பாடும் பாரம்பரியமும் தொன்மையும் மிக்க ஈழத்தில், உலகத் தமிழராயச்சி மாநாடு பெரும் எழுச்சியாக நடந்தது. யாழ் நகரமே பாரம்பரிய பண்பாட்டுக் கோலத்தின் காட்சியில் இருந்தது. தாம் பேசும் மொழிக்குத் தமிழர்கள் வரலாற்றுப் பெருவிழா எடுத்தனர்.

அம் மாநாட்டை கண்ணுற்ற அன்றைய பேரினவாத அரசு, தமிழர்களின் எழுச்சியை - அவர்களின் பண்பாட்டுப் பெருங்கோலச் சிறப்பை - சகிக்க இயலாது, ஈழத் தமிழ் இனத்தின் மீது இனவெறி வன்முறை கொண்டு தாக்கியது. அதுவரை காலமும் ஈழத்தில் தமிழ் மக்கள் தமது அடையாளத்தின் பொருட்டு, எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்களோ, அதே போன்று தமிழைச் சிறப்பித்து நின்ற காரணத்தினால் இந்த மாநாட்டின் மீதும் இனவெறி வன்முறை கொடூரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டது.

ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசமாக ஒன்றுபட்டு எழுந்து நின்று நடத்திய உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை தன்னுடைய படைகள் மூலம் ஆயுத வன்முறையினால் தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்திய சிங்கள தேசத்திற்கு அதே வழியில் பதில் கொடுக்க வேண்டும் என்ற ஓர்மத்தை - தீவிரத்தை - தமிழ் இளைஞர்களுக்கு இந்தப் படுகொலை சம்பவம் ஊக்கியாய் ஊட்டி விட்டது.

அதன் விளைவுகளைத்தான் அதன் பின்னர் வந்த மூன்றரை தசாப்த காலமும் தென்னிலங்கைச் சிங்களமும் உட்பட்ட இலங்கை தீவு பெரும் வன்முறை புயலாக எதிர்கொண்டது என்பது பின்னால் நடந்த வரலாற்று சரிதமாகும்.




# கொழும்பு - மட்டு. நான்கு ரயில் சேவைகளை தினசரி ஒன்றாக்கியதே இவ்வரசின் சாதனை!

## இரா.சாணக்கியன் எம்.பி. சபையில் விசனம் தெரிவிப்பு

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு தினசரி நான்கு ரயில் சேவைகள் இருந்தன. நான்கு நேர சேவையாக இருந்த ரயில் சேவையை ஒரு சேவையாக மாற்றிய இந்த அரசின் சாதனை.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் விசனம் தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

அவர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியவை வருமாறு:-

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா மட்டக்களப்பு காரமுனை நிலம் சம்பந்தமாகச் சில கருத்தை வெளியிட்டு இருந்தார். காரமுனை என்னும் இடம் பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்த ஒரு தமிழ்ப் பிரதேசம். இந்தப் பிரதேசத்திலேயே இஸ்லாமிய சகோதரர்கள் வாழ்ந்தார்கள் என ஹிஸ்புல்லா நேற்றைய தினம் அவர்களுடைய சான்றுகள் அளிக்கப்பட்டதென்று நாடாளுமன்றத்திலே சொன்னார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அரசு அதிகாரிகளைப் பழிசுமத்துவது மிகவும் பிழையான விடயம். 2023 ஆண்டளவில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை இந்தக் காரமுனை பிரதேசத்தில் குடியேற்ற வந்தபொழுது நான் அந்த இடத்திலே நின்று என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் நின்று அந்தக் காணியாளர்களையும், அந்த ராணுவ அதிகாரிகளையும், அந்தப் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சகோதரர்களையும் நாங்கள் அங்கிருந்து விரட்டி அடித்திருந்தோம். அந்த நேரத்திலே இந்தக் காரமுனையை பாதுகாக்க ஹிஸ்புல்லா வரவில்லை.

நான் சில அரசு அதிகாரிகளிடம் பேசியபொழுது அவர்கள் சில விடயங்களைச் சொன்னார்கள். வாகரை வடக்கு கோரளைப்பற்று வடக்கு பிரதேசத்தில் இருந்த சிலர் யுத்தம் காரணத்தினால் இடம்பெயர்ந்து போயிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று காணியில் சில இடங்களில் வழங்கியிருந்தால் அந்த மாற்று காணிகளை வைத்துக்கொண்டு மீண்டும் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை கேட்பது நியாயம் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்.

அந்த வகையில் காரமுனை என்பது தமிழர்களுக்குச் சொந்தமான ஒரு பிரதேசம். இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் மாவட்ட மட்டத்தில் ஆராயாமல் முடிவுகளை எடுக்க முடியாது. நாடாளுமன்றத்திலே இதற்கான சில திட்டங்களைக் கொண்டு வருவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வரும் இந்த ரயில் சேவையை பற்றி மிக முக்கியமாகச் சொல்ல வேண்டும். நான் அறிந்த வகையிலே அரசாங்கங்கள் புதிய ரயில் சேவையை உருவாக்குவது பற்றித்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் புதிய ரயில் பாதையை உருவாக்கியதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அரசாங்கங்கள் புதிய ரயில்களை மக்களுக்காக கொண்டு வந்தமை பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.

முதன்முறையாக, மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் நான்கு நேர சேவையாக இருந்த ரயில் சேவையை ஒரு சேவையாக மாற்றியதே இந்த அரசின் சாதனை. இந்த வரலாற்று சாதனை செய்த பெருமை இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைச் சேரும்.

எங்களுடைய மாவட்டத்திலே காலை 06.10 தொடங்கி கொழும்புக்கு வருவதற்கு ஏதுவாக இருந்த ரயில் சேவையை தற்பொழுது ஐந்து மணிக்கு ஆரம்பித்து அவர்கள் கல்லோயா சென்று திருகோணமலையில் இருந்து வரும் ரயில் சேவையில் மாறி ஏறிப் போக வேண்டிய நிலை இருக்கின்றது. அதே போலத்தான் கொழும்பிலிருந்து வந்தாலும் கல்லோயாவில் இறங்கி மாறி வர வேண்டியுள்ளது.

புலஸ்தினி என்ற அந்த ஒரு ரயில் சேவை கடந்த அரசாங்கம் இருந்த பொழுது நான் கடந்த அரசாங்கத்திடம் பேசி மட்டக்களப்புக்குக் கொண்டு வந்த சேவை. தற்பொழுது இவ் அரசு வெள்ளிக்கிழமைக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கும் ஆக மாத்திரம் அதனை மாற்றியுள்ளது. அதே போலத்தான் இரவு 08.15 மட்டக்களப்பிலிருந்து செல்லும் ரயிலை அரசு முழுமையாக இல்லாமல் செய் திருக்கின்றது.

நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஜனாதிபதியிடம் பேசி ஒரு தேசிய விமான சேவை ஆரம்பிக்க முயற்சிக்கும் போது. அடுத்த பக்கம் மாவட்ட ரயில் சேவையை மட்டுப்படுத்தி எமது மக்களுக்கான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கின்றது இந்த அரசு. இதனால் எமது மக்கள் பாரிய துன்பங்களை அனுபவிக்கின்றனர். எமது மக்களுக்கு உரிமையும் இல்லை ரயில் வசதியும் இல்லை. - என்றார்.



# மீளப்பெறப்பட்ட 102 வழக்குகளில் 65 வழக்குகள் திரும்பவும் தாக்கல்

## நாடாளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி தகவல்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபரினால் கடந்த காலங்களில் மீளப்பெறப்பட்ட 102 வழக்குகளில் 65 வழக்குகள் திரும்பவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கிணங்க எத்தகைய பாரபட்சமும் இன்றி சாட்சிகளின் அடிப்படையிலேயே இந்த வழக்குகள் மீளத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி எம்.பியான அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அஜித் பி பெரேரா எம்.பி தமது கேள்வியின் போது, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுவரை இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை? மேற்படி வழக்குகளில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாது? என்றும் வினவினார்.

அதற்கு தொடர்ந்தும் பதிலளித்த பிரதமர் கூறியவை வருமாறு:–

“இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும் சட்டமா அதிபரினாலும் மீளப்பெறப்பட்ட வழக்குகளை மீண்டும் மீளாய்வு செய்து அதற்கமைவாக வழக்குகளை மீளத் தாக்கல் செய்வோம் என “எமது வளமான நாடு, அழகான வாழ்க்கை“ கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில், 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை மீளப்பெறப்பட்ட 102 வழக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு, 65 வழக்குகளை மீளத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 34 வழக்குகளை மீள தாக்கல் செய்யாமலிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் 3 வழக்குகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது” – என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அஜித் பி பெரேரா தனது மேலதிக கேள்வியின் போது –

“கடந்த காலங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த, பாரியளவில் பேசப்பட்டுவந்த பல வழக்குகள் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது சட்டமா அதிபரினால் தொழிநுட்பக் கோளாறு என்ற அடிப்படையில் மீளப்பெறப்பட்டிருந்தன. தற்போது அவ்வாறு மீளப்பெறப்பட்ட வழக்குகளில் 65 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டாலும் பாரதூரமான நிதி மோசடியுடன் தொடர்பான வழக்குகள் எதுவும் மீள தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறான வழக்குகளை மீள தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? என கேட்கிறேன்” என்றார்.

அதற்கு பிரதமர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

“102 வழக்குகளில் 65 வழக்குகளை மீள தாக்கல் செய்துள்ளதுடன் இன்னும் 3 வழக்குகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். இதனால் நாங்கள் யாரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெளிவாகும். இந்த சபையில் இருக்கும் மற்றும் முன்னர் இருந்த பலருக்கு எதிராக அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாறாக பாரபட்சம் பார்த்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை” என்றார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் குறுக்கிட்ட அஜித் பி பெரேரா எம்.பி. –

“பாரபட்சமின்றி செயற்பட்டனர் எனொ பிரதமர் தெரிவித்தார். ஆனால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, அவர் ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு தினங்களில், அவருக்கிருந்த ஜனாதிபதி சிறப்புரிமை அடிப்படையில் மீளப் பெறப்பட்டது, தற்போது அவருக்கு அந்த சிறப்புரிமை இல்லை. அதனால் அந்த வழக்கை மீள தாக்கல் செய்ய முடியும்.

“அதேபோன்று முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த கிரேக்க பிணைமுறி தொடர்பான வழக்கு உங்களது காலத்தில் மீளப் பெறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தாம் தவறிழைத்தார் எப்று தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவுன்அவர் தெரிவித்துள்ளார். வழக்கு மீள பெறப்பட்டது. அதனால் மீள வழக்கு தாக்கல் செய்யும் போதும் தெரிவுசெய்யப்பட்டே வழக்குகள் தாக்கல் செய்யும் நடவடிக்கை இடம்பெறுகிறது” என்றார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் –

“நாம் எவரையும் பாதுகாப்பதாக இருந்தால், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணையை முன்னெடுத்துச் செல்ல மாட்டோம். எவரையும் பாதுகாக்க எமது அரசாங்கம் கட்டுப்பட்டில்லை. அதற்கான அவசியமும் கிடையாது. முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு நாம் முறையாக நடவடிக்கை எடுக்கும்போது, யாரைப் பாதுகாக்க செயற்படுகிறீர்கள் என்ன எம்மைப் பார்த்து கேட்பது பெரும் விந்தையாகும். அதனால் நாம் யாரையும் பாதுகாக்கப்போவதில்லை” என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.





# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இயற்கை பேரிடர்கள் உட்பட பல்வேறு காரணங்களினால் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்களுக்கு "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற திட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது. "பகிர்ந்துண்டு வாழ்வோம்" என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டத்தின் கீழ் நேற்று வியாழக்கிழமை அராலி மற்றும் உடுவில் பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப் பட்டுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகளை பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பயனாளிகளுக்குக் கையளித்துள்ளார். இதற்கான நிதி அனுசரணையைக் கனடாவில் உள்ள யாழ்.கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.









# முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் பதவி நீக்கம்!

(அபு அலா)

கட்சியின் ஒழுக்க விதிமுறைகளை கடுமையாக மீறியதன் காரணமாக கொழும்பு மாநகர சபை உறுப்பினரான ஸோஹரா புஹாரியின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவி உடனடியாக இரத்து செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம். நிசாம் காரியப்பர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

கொழும்பு மாநகர சபையில் சமர்ப் பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்துக்கு, எதிர்க்கட்சியாக உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவாக எதிர்ப்பு தெரிவிக்க முடிவு செய்திருந்த நிலையில், அதனை மீறி ஸோஹரா புஹாரி அந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை, கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு முரணானதாகும்.

இதனையடுத்து, கடந்த 2025 டிசம்பர் 31ஆம் திகதி, கட்சி ஒழுக்கத்தை கடுமையாக மீறினார் எனக் குறிப்பிட்டு, அவரின் கட்சி உறுப்பினர் பதவி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் குற்றச் சாட்டுகள் தொடர்பாக ஒரு வாரத்திற்குள் சத்தியக் கடதாசி வாக்குமூலமாக விளக்கம் அளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் எவ்வித விளக்கமும் அல்லது சத்தியக்கடதாசியும் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக, குற்றச்சாட்டுகளை அவர் மறைமுகமாக ஏற்றுக்கொண்டார் எனக் கருதி, கட்சி ஒழுக்க நடைமுறைகளின்படி, அவரின் கட்சி உறுப்பினர் பதவியை முழுமையாக இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம், கட்சி தலைவர் ரவூப் ஹக்கீமின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது இறுதியானதும் மாற்றமற்றதுமான தீர்மானமாகுமென்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலையில்லாப் பட்டதாரிகளையும் ஒன்றாகச் சேர்த்து புதிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை வகுங்கள்!

## எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யோசனை




காலநிலை மாற்றங்கள் நிகழும் போது அனர்த்த முகாமைத்துவ வழிமுறை முழுமையாக மாற வேண்டும். அனர்த்த முகாமைத்துவத் துறைக்கென பிரத்தியேகமான அமைச்சொன்றை ஸ்தாபித்து, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம், வளிமண்டயலவியல் திணைக்களம் போலவே தேவையான புதிய நிறுவனங்களையும் ஸ்தாபித்து இவற்றை இந்த அமைச்சின் கீழ் கொண்டு வந்து, இதனைப் பலப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறே, புதிய இடர் முகாமைத்துவச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். சுமார் 35,000 வேலையில்லாப் பட்டதாரிகள் காணப்படுகின்றனர். இவர்களுக்கு இந்தத் துறைகளில் முறையான பயிற்சிகளை வழங்கி, இந்தியாவைப் போல அவசரகால படையணியை ஸ்தாபிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2000 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மொனாச் பல்கலைக்கழகம், 9 நாடுகளில் 217 சூறாவளிகள் தொடர்பில் மேற்கோண்ட ஆய்வின் பிரகாரம், சுமார் 150 இலட்சம் இறப்புகள் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. சூறாவளிகளுக்குப் பிந்தைய காலத்தில் ஏற்படும் இறப்புகள், சூறாவளிகளால் ஏற்படும் இறப்புகளை விட அதிகம் என்று தெரியவந்துள்ளதால், புதிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.



# கடும் சீற்றத்துடன் முல்லைத்தீவு கடல்

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் வழமைக்கு மாறாக கடல் சீற்றத்துடன் கொந்தளிப்புடன் காணப்படுவதை நேற்றையதினம் அவதானிக்க கூடியதாக இருந்தது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு கடற்கரை வழமைக்கு மாறாக சீற்றத்துடன் கொந்தளிப்பாக காணப்படுகின்றது.

இதனால் கடற்தொழிலாளர்கள், மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியவில்லை. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 8,9 ஆம் திகதிகளில் மழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் , இன்று 10 ஆம் திகதி அதிக மழை கிடைக்கப்பெறும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







# வீரமுனை வளைவு வழக்கு பெப்.5 க்கு!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயத்திற்கான வரவேற்பு வளைவு தொடர்பான வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இவ் வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி தவணை, மன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணி அருள் நிதான்சன் தெரிவித்தவை வருமாறு:-

சம்மாந்துறை பிரதேச சபையின் அனுமதி இன்றி வளைவு கட்டடம் அமைக்க ஆரம்பித்தமை தொடர்பாகக் கடந்த வருடம் செப்டெம்பரில் வழக்கு தொடுத்திருந்தமை தெரிந்ததே.

ஆரம்பத்தில் இவ்வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ம.ஆ.சுமந்திரன் மற்றும் மு.கா. செயலாளர் நிஸாம் காரியப்பர் உட்பட பல சட்டத்தரணிகளும் ஆஜராகியிருந்தனர்.

அவ்வேளையில் இரண்டு சமூகத்தினரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து ஆலோசித்து தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என இந்தத் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி இவ்வழக்கு நேற்றையதினம்(09 ஆம் திகதி) சம்மாந்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கிற்கு சம்மாந்துறை பிரதேசசபை சார்பாக சட்டத்தரணிகளான பௌஸான், சாமிளா ஆகியோரும், கோவில் நிர்வாகத்தினர் சார்பாக தமிழரசு கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான இளைஞர் அணி தலைவரும் சட்டத்தரணியுமான அருள். நிதான்சன் ஆகிய நானும் ஆஜராகியிருந்தோம்.

அதன் அடிப்படையில் விவாதங்களை ஆராய்ந்த நீதிபதி இரு தரப்பினரும் இணைந்து சாதகமான பல முடிகளை எடுத்திருந்த போதிலும், சரியான தெளிவின்மையான செயற்பாடுகள் காணப்படுவதால் மீண்டுமொருமுறை இருதரப்புடனும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதிக்கு முன்பாக பேசி தீர்க்கமான முடிவினை பெற போவதாக குறிப்பிட்டார்.

பொதுநலமான இந்த விவகாரத்தை இரு தரப்பினரும் பாராபட்சம் காட்டாமல் இணைந்து தீர்க்கமான முடிவை அடுத்த தவணை வழக்கின் போது தெரிவிப்பார்கள் என நீதிமன்றம் உத்தேசித்துள்ளது.

இருதிறத்தரும்பேசி மன்றுக்கு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்ற அடிப்படையில் நீதிமன்றம் இந்த கட்டளையை பிறப்பித்துள்ளது. – என்றார்.



# சிறுமி டினோஜாவின் மரணத்திற்கான நீதியை விரைந்து வழங்க வற்புறுத்துகிறார் ரவிகரன்

## ஜனாதிபதி, சுகாதார அமைச்சருக்குக் கடிதம்

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியைச்சேர்ந்த சிறுமி குகநேசன் டினோஜாவின் சர்ச்சைக்குரிய மருத்துவமனை மரணத்திற்கு விரைந்து நீதியை வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோரிடம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 03 ஆம் திகதியன்று சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதிகோரி ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதிகோரி 986பேர் கையொப்பமிட்ட மகஜரும் இக்கடிதத்துடன் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் "மாணவி குகநேசன் டினோஜாவின் மரணம் தொடர்பில் நியாயமான விசாரணை கோருதல் - முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை" எனத் தலைப்பிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனாக் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-



முல்லைத்தீவு மாவட்டம் - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த மாணவி குகநேசன் டினோஜா என்பவரின் மரணம் தொடர்பில் தங்களின் மேலான கவனத்திற்கு மரியாதையுடன் கொண்டு வருகிறேன்.

கடந்த 2025.12.21 அன்று இரவு 7.20 மணியளவில், இந்த மாணவி உணவு ஒவ்வாமையால் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

ஒவ்வாமையின் விளைவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர், குழந்தை நல மருத்துவர் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவர்களின் பரிந்துரையோடு குறித்த மாணவிக்கு அதிகளவான மருந்து ஏற்றப்பட்டு அதன் பின்னர் 10 நிமிடத்தின் பின்னர் பிள்ளை மரணமடைந்ததாக பொதுமக்கள் பலரும் முறைப்பாடுகளை முன்வைத்தனர். மேலும் இது தொடர்பில் மருத்துவமனை ஊழியர்கள் சிலரும் நேரடியாக என்னிடம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தின் தீவிர நிலையைக் கருத்திற்கொண்டு, இது தொடர்பில் நியாயமான, வெளிப்படைத்தன்மையான, சுயாதீன விசாரணை அவசியம் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பு குறித்து பொதுமக்களால் பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்டமையையும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

வளப்பற்றாக்குறை மற்றும் ஆளணி பற்றாக்குறை ஆகியவற்றால் மாவட்ட பொது மருத்துவமனை என்ற வகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இந்த மருத்துவமனையில், வினைத்திறனான மருத்துவ சேவை வழங்கல் தொடர்பான தொடர்ச்சியான கண்காணிப்பும் பொறுப்புக்கூறலும் அவசியமாகிறது.

எனவே, மேற்படி சிறுமியின் மரணம் தொடர்பில் நீதியான, சுயாதீன விசாரணை மேற்கொள்ள ஆவன செய்யுமாறும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் பாதுகாப்பான, தரமான மற்றும் வினைத்திறனான மருத்துவ சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இத்தோடு முல்லைத்தீவு சமூகத்தினரின் 986 கையொப்பங்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதத்தையும் தங்களுக்கு இணைத்து அனுப்புகிறேன்.

தங்கள் கனிவான கவனத்திற்கும் மேற்படி வேண்டுகைக்கான விரைவான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாக அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# இரு பஸ்களும் லொறியும் மோதி விபத்து ஒருவர் உயிரிழப்பு; பல பயணிகள் காயம்

## கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பல்பாத பகுதியில் சம்பவம்

(உடப்பு க.மகாதேவன்)

கொழும்பு – கண்டி பிரதான வீதியின் பல்பாத பகுதியில் நேற்றுப் பிற்பகல் இரண்டு பஸ்களும் டிப்பர் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், லொறியின் உதவியாளர் உயிரிழந்தார். இந்த விபத்தில் லொறியில் பயணித்த மற்றொரு நபரும், இரண்டு பஸ்களிலும் பயணித்த சில பயணிகளும் காயமடைந்து கேகாலை மற்றும் மாவனெல்லை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பூண்டுலோயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸிலிருந்த பயணிகளே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

# 6 ஆம் தரப் பாடப் புத்தகத்தின் விவகாரம் தற்செயலானது அல்ல, திட்டமிடப்பட்டது!

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்.)

6 ஆம் தரப் பாடப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட ஓரினச் சேர்க்கை தொடர்பான விவகாரம் தற்செயலானது அல்ல. அது திட்டமிடப்பட்டு சேர்க்கப்பட்டது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிதுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது,

ஒரு பாடப் புத்தகம் பலரது தொடர்புகளைத் தாண்டியே வெளிவருகின்றது. எழுத்தாளர்குழு, தட்டச்சு செய்வோர், பக்க வடிவமைப்பாளர்கள், பூரூவ் பார்வையாளர், இணைப்பாளர்கள், பணிப்பாளர், மேற்பார்வையாளர் எனப் பலரது தொடர்புகளைத் தாண்டித் தான் ஒரு பாடப் புத்தகம் வெளிவருகின்றது. இந்த விடயங்களைப் புத்தகத்தின் ஆரம்பப் பக்கங்களில் நாம் காணலாம்.

இந்த நிலையில் ஒரு புத்தகத்தில் எந்தவொரு விடயத்தையும் யாரும் தனிப்பட்ட ரீதியில் இடையில் செருக முடியாது என்பது தெளிவாகின்றது. இந்த வகையில் நோக்கும் போது 6 ஆம் தரப் பாடப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட ஓரினச் சேர்க்கை தொடர்பான விவகாரம் தற்செயலானது அல்ல. அது திட்டமிட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டதே என்பது தெளிவாகின்றது.

நமது நாட்டுக்கென்று சிறந்த கலாசார பாரம்பரியங்கள் இருக்கின்றன. இந்தக் கலாசாரங்களைச் சிதைப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

பொதுமக்களின் எதிர்ப்பை சமாளிப்பதற்காக விசாரணை நடத்தப்படுகின்றது எனக் கூறி காலங்கடத்தும் செயற்பாடு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. எனினும், இந்த விடயத்தில் யாரும் தவறு செய்தவராக அடையாளப் படுத்த பட மாட்டார் என்பது யதார்த்தமாகும். காலம் இதற்கு பதில் சொல்லும். ஏனெனில்திட்டமிட்டஅடிப்படையில்பொதுவாக எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு யாரை குற்றஞ்சாட்ட முடியும் கேட்க விரும்புகின்றேன்.

கல்வி அமைச்சருக்கு இது போன்ற குழுக்களோடு தொடர்பு உள்ளது என்ற விமர்சனம் கடந்த காலங்களில் வெளிவந்ததை பொது மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நம்புகின்றேன். எனவே, அவர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி தனக்கு பிடித்த கொள்கையை பாடப்புத்தகத்தில் உள்வாங்கியுள்ளார் என்பதில் என்ன சந்தேகமுள்ளது.

இவர் தொடர்ந்து கல்வி அமைச்சராக இருந்தால் நமது கலாசார, பாரம்பரியங்களை சிதைத்து விடுவார். இதனால் தான் நாம் கல்வி அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தோம்.– என்றார்.

# இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டன!



தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 4 வான் கதவுகள் தலா 4 அடி மற்றும் 2 வான் கதவுகள் தலா 2 அடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விநாடிக்கு 50,176 கன அடி நீர் கலா ஓயாவுக்குத் திறந்து விடப்படுவதாக நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் இடம்பெற்ற விபத்து யாழ்ப்பாணத்துப் பெண் உயிரிழப்பு!

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் இலங்கைத் தமிழ் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டொரண்ரோ, இட்டோபிகோக் நகரில் இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 35 வயதான அனுஷா ராஜகாந் என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த டொரண்ரோ பொலிஸார் மீட்புப் படையினர் காயமடைந்த பெண்ணைக் காப்பாற்ற முயற்சித்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த பெண் நடைபாதையில் வீதியைக் கடந்து செல்கையில், அவர் மீது வாகனம் மோதியுள்ளது என்று டொரண்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



### மட்டு. ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட

# செங்கலடி – பதுளை வீதிச் சந்தியில் வர்த்தக நிலையம் ஒன்றில் திருட்டு!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செங்கலடி – பதுளை வீதிச் சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலைவேளையில் கடைக்குள் புகுந்த மர்ம நபர்கள், மிகத் திட்டமிட்ட முறையில் இந்தத் திருட்டை அரங்கேற்றியுள்ளனர்.

திருடப்பட்ட சொத்துக்கள் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் வழங்கிய தகவலின்படி, 45 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் 5 பவுண் நகைகள் மற்றும் கடையில் இருந்த பெறுமதியான விற்பனைப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் அடங்கியுள்ளன என்று தெரியவருகிறது.

தடயங்களை அழித்துத் திருடர்கள் மிகவும் சாதுரியமாகச் செயற்பட்டுள்ளனர். தாங்கள் அடையாளம் காணப்படுவதைத் தவிர்ப்பதற்காக, கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களைச் சேதப்படுத்தியதுடன், அவற்றின் காட்சிகளைப் பதிவு செய்யும் கருவிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து ஏறாவூர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, சந்தியில் அமைந்துள்ள ஏனைய வர்த்தக நிலையங்கள் மற்றும் வீதிகளில் உள்ள பொதுவான சிசிரிவி கமரா காட்சிகளைப் பயன்படுத்தித் திருட்டில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணப் பொலிஸார் முயற்சித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காலி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று இரவு திடீரென தீ விபத்து!




காலி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவியதையடுத்து, இது குறித்து பொலிஸ் அவசரப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து உடனடியாகச் செயற்பட்ட பொலிஸாரும் காலி மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பாரதிபுரம் வீதியை புனரமைக்குமாறு மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!

பாரதிபுரம் வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காலம் காலமாக பாரதிபுரம் மேன்கமம் பிரதான வீதி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரமும் மற்றும் பாரதி மகாவித்தியால வீதி 800 மீற்றர் துரமும் இன்று வரை மண்வீதியாகவே காணபடுகின்றது. மழை வெள்ளம் ஏற்படும் போது நீரில் மூழ்கிச் சேறும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியின் ஊடாகவே பாடசாலை மாணவர்கள் செல்லவேண்டியுள்ளது. இதனால் மாணவர்களின் சீருடைகள் அசுத்தமடைவதுடன் வாகனங்கள், சைக்கிள்களில் செல்ல முடியாது கால்நடையாக மிகவும் சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர்.

அதுமட்டுமின்றி இவ்வீதியால் பல கிராமத்து மக்கள் கிளிவெட்டி வைத்தியசாலைக்கு சென்று வருகின்றனர். அத்துடன் பெரும்பாலன விவசாயிகள் இவ்வீதியால் வயல்களுக்குச் சென்று வருகின்றனர். மேன்கமம், பாரதிபுரம் மக்கள் மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு என்று பயணம் செய்வதற்கு ஏ-15 பிரதான வீதிக்குப் பொது போக்குவரத்து வாகனங்களுக்காக இந்த பாரதிபுரம் வீதியூடாகவே பயணிக்கின்றனர்.

எனவே இந்த வீதியை தாமதிக்காது அரசு திருத்தித் தரவேண்டும் என்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாரதிபுரம் கிராம அபிவிருத்தி சங்கமும் முன்னிற்று இந்தப் போராட்டத்தை நடத்தியது.

இதுவரைகாலமும் கடந்த ஆட்சியாளர்கள் தாமதித்தைபோல் இருந்து விடாது என்று இந்த அரசின் மீது எமது மக்களுக்கும் எமக்கும் பெரும் நம்பிக்கை உள்ளது. எனவே இந்த பாரதிபுரம் கிராமத்தின் மக்களின் கஸ்ர நிலையைப் புரிந்து கொண்டு விரைவாக இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு தயவாக வேண்டிகொள்கின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறினர்.










# குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகம்!

## துர்நாற்றம் வீசுகின்றன மலசல கூடங்கள் நுளம்பை விரட்ட புகைபோடும் அலுவலர்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பின் பக்க வளாகம் நீண்ட நாள்களாகத் துப்புரவு செய்யப்படாத நிலையில் குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது என்று யாழ். மாநகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முதல்வருக்கு இது தொடர்பில் கிடைத்த முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில், நேற்று சபை அமர்வுகள் இடம்பெற்று இடைவேளை விட்டபோது இது தொடர்பில் உறுப்பினர்கள் சகிதம் அந்தப் பகுதிகளை முதல்வர் பார்வையிட்டுள்ளார்.

இதனையடுத்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளை முதல்வர் பணித்துள்ளார்.

இந்தப் பகுதியில் பெருமளவாக குப்பைகள் குவிக்கப்பட்டுள்ளன. பற்றைக் காடாகவும் இந்தப் பகுதி காட்சியளிக்கிறது.

அத்துடன் பழுதடைந்த ரியூப் லைற்றுகள் மற்றும் வெற்றுப் பேணிகள், பெயின் வாளிகள் போன்றனவும் இந்தப் பகுதிகளில் போடப்பட்டுள்ளன.

இவை நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக இருக்கின்றமையுடன் யாழ். மாநகரப் பிரிவில் நுளம்பு பெருகும் முக்கிய ஓர் இடமாகவும் இது காணப்படுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருத்திப் பயன்படுத்தக் கூடிய வகையிலான 10 இற்கும் மேற்பட்ட குப்பை வண்டிகள் இந்தப் பகுதியில் முடக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்கு மேலாகப் பற்றைகள் படர்ந்து வளர்ந்துள்ளன.

இதேவேளை இங்கு காணப்படும் மலசல கூடம் முகம் சுழிக்கும் அளவுக்கு மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. மாநகரத்தைச் சுத்தம் செய்யும் மாநகர சபையிலேயே இவ்வாறு மிகவும் மோசமாக மலசலகூடம் காணப்படுகின்றமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அங்கு கடமையாற்றும் இது தொடர்பிலான அதிகாரிகளதும் ஊழியர்களதும் அசமந்தப் போக்கும் பொறுப்பற்றதனமும்தான் இதற்குக் காரணம் என்று முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களைச் சபை உறுப்பினர்கள் மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றனர் என்று தெரிவிக்கும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் அவர்கள் என்ன தெரிவிக்கப் போகின்றனர் என்று யாழ். மாநகர சபை முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடமைகள் சரிவர இடம்பெறாத நிலையில், மக்கள் நலனையும் மாநகரத்தின் நலனையும் கருத்தில் கொண்டு செயற்படும் சபை உறுப்பினர்கள் தொடர்பில் தவறான விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றும் உறுப்பினர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# விஜய்யின் ‘ஜனநாயகன்’ திரைப்பட வழக்கை ஜனவரி 20 இற்கு ஒத்திவைத்த உயர் நீதிமன்றம்

## வெளியீடு மேலும் தாமதம்



‘ஜனநாயகன்’ திரைப்பட தணிக்கைச் சான்று தொடர்பான வழக்கின் விசாரணையை சென்னை உயர் நீதிமன்றம் ஜனவரி 20 இற்கு ஒத்திவைத்துள்ளது.

இதனால், ‘ஜனநாயகன்’ திரைப்பட வெளியீடு மேலும் தாமதம் ஆகிறது.

முன்னதாக, நேற்று காலை விஜய்யின் ‘ஜனநாயகன்’ திரைப்படத்துக்கு உடனடியாக A/V சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் தனி நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. மேலும், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்வதாக அறிவித்தது.

தனி நீதிபதி பிறப்பித்த இந்தத் தீர்ப்புக்கு எதிராக, தணிக்கை வாரியம் தரப்பில், தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா தலைமையிலான அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

அப்போது, மனுவாகதாக்கல்செய்தால் விசாரணைக்கு ஏற்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தணிக்கை வாரியம் தரப்பில் உடனடியாக மேல்முறையீட்டு மனு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போதுதணிக்கைவாரியத்தரப்பில், “தணிக்கை சான்று வழங்கக் கோரி மட்டுமே படக்குழு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், படத் தயாரிப்பு நிறுவனம் கோராத நிவாரணம் எல்லாம் நீதிமன்றம் வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும்,படத்துக்கு எதிரான புகாரை மும்பை அலுவலகத்தில் இருந்து பெற்று சமர்ப்பித்திருக்கிறோ, எங்கள் தரப்பில் பதில் மனு தாக்கல் போதிய அவகாசம் கோரினோம். அதுவும் அளிக்கப்படவில்லை.” எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு தயாரிப்பு நிறுவனம் தரப்பில், “தணிக்கை வாரியக் குழுவின் உறுப்பினரே எப்படிப் புகார் அளிக்க முடியும்?” என்று வினவப்பட்டது. அதற்கு நீதிபதி, “இது வாதத்துக்கு உரிய விஷயம்” என்று கூறினார்.

மேலும், “தணிக்கை வாரியத் தரப்புக்கு நியாயமான அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின் பரிசீலித்திருக்க வேண்டும். படத்தை மறு ஆய்வு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோராத நிலையில் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது ஏன்?” என்று நீதிமன்றம் வினவியது.

மேலும், “தணிக்கை சான்றிதழுக்காக பொறுமையாக காத்திருக்க வேண்டும். அதை விடுத்து நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளீர்கள்.

நீங்கள் திகதியை அறிவித்துள்ளீர்கள் என்பதற்காக எல்லாரும் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப செயல்பட வேண்டுமா?” என்று படத் தயாரிப்புக் குழுவுக்கு தலைமை நீதிபதி கேள்விகளை முன்வைத்தார்.

தொடர்ந்து, ‘ஜனநாயகன்’ படத்துக்கு தணிக்கைச் சான்று வழங்கும்படி தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்தார். மேல் முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க பட நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு, வழக்கு விசாரணையை ஜனவரி 20 ஆம் திகதிக்கு தள்ளி வைத்தார். இதனால், பொங்கலையொட்டி வெளியாகவிருந்த இந்தப் படத்தின் வெளியீடு மேலும் தாமதம் ஆகிறது.

# ‘ஜனநாயகன்’ தணிக்கை சர்ச்சை: முதல்வர் ஸ்டாலின் கண்டனம்



பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக “சென்சார் போர்டும்” மாறியுள்ளது என ‘ஜனநாயகன்’ படம் விவகாரத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதள பக்கத்தில் அவர் வெளியிட்ட பதிவில்,

“சி.பி.ஐ, அமுலாக்கத் துறை, வருமான வரித் துறை வரிசையில் “சென்சார் போர்டும்“ ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக மாறியுள்ளது. மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவுக்கு கடுமையான கண்டனங்கள்.” என தெரிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ் திரைத் துறையில் விஜய்யின் ‘ஜனநாயகன்’ மற்றும் சிவகார்த்திகேயனின் ‘பராசக்தி’ படங்கள் வெளியாவதாக அறிவிக்கப்பட்டன. இதில் ‘பராசக்தி’ படத்துக்கு பல ‘வெட்டு’களுக்குப் பிறகு தணிக்கைக் குழுவின் சான்றிதழ் கிடைத்துள்ளது. இதனால் அந்தப் படம் ஜனவரி 10 இன்று வெளியாகிறது. தணிக்கை குழு தெரிவித்த மாற்றங்கள் மற்றும் பரிந்துரையை ‘பராசக்தி’ படக்குழு மாற்றியுள்ளது.

‘ஜனநாயகன்’ படத்துக்கு தணிக்கை குழு சான்றிதழ் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசின் ஒப்பந்தங்களில் பங்கேற்க சீன நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு நீக்கம்!



இந்திய மத்திய அரசின் ஒப்பந்தங்களில் பங்கேற்க, சீன நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க நிதியமைச்சகம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய – சீன இராணுவங்களுக்கு இடையே கடந்த 2020 இல் கல்வான் பள்ளத்தாக்கில் மோதல் ஏற்பட்டது.

இதையடுத்து சீன நிறுவனங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, அரசு ஒப்பந்தங்களில் பங்கேற்க விரும்பும் சீன நிறுவனங்கள், மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுவிடம் பதிவு செய்து, அரசியல் மற்றும் பாதுகாப்பு ரீதியான ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டது.

தற்போது எல்லை பதற்றம் தணிந்து, சீனாவுடன் தூதரக ரீதியிலான உறவு மேம்பட்டுள்ள நிலையில், வர்த்தக உறவுகளை மீட்டெடுக்க மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

“சீன நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க நிதிய மைச்சகம் திட்டமிட்டுள்ளது. எனினும், பிரதமர் அலுவலகம்தான் இதுதொடர்பாக இறுதி முடிவு எடுக்கும்.

திட்டங்களை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுவதாகவும், உதிரிபாக பற்றாக்குறை நிலவுவதாகவும் பல்வேறு அரசு துறைகள் தெரிவித்ததையடுத்து, தடையை நீக்க பரிசீலிக்கப்பட்டுள்ளது,” என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நெதன்யாகுவை சிறைபிடிக்க வேண்டும்: பாகிஸ்தானின் அமைச்சரின் எதிர்பார்ப்பு



வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை சிறைபிடித்ததை போன்று, மனிதநேயத்தின் மீது அமெரிக்காவிற்கு நம்பிக்கை இருந்தால், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அவர்கள் சிறைபிடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

துருக்கியும் நெதன்யாகுவைக் கடத்த வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்ட அவர், பாகிஸ்தானியர்கள் அதற்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள் என்றும் கூறினார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில்பேசிய ஆசிப், நெதன்யாகுவை மனித குலத்தின் மிக மோசமான குற்றவாளி என்று வர்ணித்தார்.


மேலும், காசாவில் பலஸ்தீனியர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அத்துமீறல்களுக்கு இணையான கொடுமைகள் வரலாற்றிலேயே இல்லை என்றும் அவர் வாதிட்டார்.

“கடந்த 4,000-5,000 ஆண்டுகளில் இஸ்ரேல் பலஸ்தீனியர்களுக்குச் செய்ததை எந்தவொரு சமூகமும் செய்ததில்லை.

அவர் (நெதன்யாகு) மனிதகுலத்தின் மிகப்பெரிய குற்றவாளி. உலகம் இதைவிடப் பெரிய குற்றவாளியைக் கண்டதில்லை,” என்று ஆசிப் கூறினார்.

# ஈரானின் அமைதியின்மைக்கு வொஷிங்டன் தான் காரணம்

## உயர்மட்டத் தலைவர் அயதுல்லா அலி கமேனி குற்றச்சாட்டு



பொருளாதார நெருக்கடியால் ஈரானில் போராட்டங்கள் பரவி வரும் நிலையில், அந்நாட்டின் உயர்மட்டத் தலைவர் அயதுல்லா அலி கமேனி அமெரிக்காவிற்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானிய அரசு ஊடகங்கள் வெளியிட்ட அவரது உரையில், இந்த அமைதியின்மைக்கு வொஷிங்டன் தான் காரணம் என்று குற்றம் சாட்டிய கமேனி, அகங்காரத்துடன் ஆட்சி செய்யும் தலைவர்கள் தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியைச் சந்திப்பார்கள் என்று கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை நேரடியாகக் குறிப்பிட்டுப் பேசிய கமேனி, வரலாற்றில் கொடுங்கோலர்களும் அகங்கார ஆட்சியாளர்களும் தங்களது அதிகாரத்தின் உச்சியில் இருந்தபோதே வீழ்ச்சியடைந்ததாகக் கூறினார்.

"உலகம் முழுவதையும் ஆணவத்துடன் மதிப்பிடும் அமெரிக்க ஜனாதிபதி, ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும், பார்வோன், நிம்ரோத், முகமது ரேசா (பஹ்லவி) போன்ற கொடுங்கோலர்களும் அகங்கார ஆட்சியாளர்களும் தங்களது ஆணவத்தின் உச்சியில் இருந்தபோதே வீழ்ச்சியைச் சந்தித்தனர்," என்று அவர் கூறினார்.

"இவரும் வீழ்வார்." என்று கமேனி குறிப்பிட்டார்.

சில போராட்டக்காரர்கள் உண்மையான குறைகளுக்காகப் போராடவில்லை என்றும், வொஷிங்டனின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவே செயல்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

தெஹ்ரான் மற்றும் பிற நகரங்களில் நடந்த பொதுச் சொத்து சேதங்களைச் சுட்டிக்காட்டிய அவர், சிலரது வேலை அழிப்பது மட்டுமே என்றார்.

இத்தகைய செயல்கள் அமெரிக்க ஜனாதிபதியை மகிழ்விப்பதற்காகவே செய்யப்படுகின்றன என்று அவர் கூறினார்.

மேலும், ஈரானிய அரசு போராட்டக்காரர்களுக்கு எதிராகச் செயல்பட்டால் வொஷிங்டன் அவர்களுக்கு ஆதரவளிக்கும் என்று ட்ரம்ப் கூறியதை தேவையற்ற அபத்தம் என்று கமேனி சாடினார்.

"இவர்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அவரால் முடிந்தால் முதலில் தன் நாட்டை நிர்வகிக்கட்டும். அவரது சொந்த நாட்டில் எத்தனையோ சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன," என்றார்.

சமீபத்திய நாள்களில், ட்ரம்ப் ஈரானியத் தலைமைக்குத் தொடர்ச்சியான பொது எச்சரிக்கைகளை விடுத்துள்ளார்.

ஈரானிய அதிகாரிகள் போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பலப்பிரயோகம் செய்தால் அமெரிக்கா தலையிடும் என்று கூறினார்.

"அவர்கள் இந்த மக்களுக்கு ஏதேனும் தீங்கு செய்தால், நாங்கள் அவர்களைக் கடுமையாகத் தாக்குவோம்," என்று அவர் எச்சரித்தார்.

மேலும் ஈரானிய அதிகாரிகள் மக்களைக் கொல்லத் தொடங்கினால், அதன் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும் என்று ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஈரானிய அதிகாரிகள், அமெரிக்காவின் எந்தவொரு தலையீடும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் படைகள் மீது தாக்குதல் நடத்தத் தூண்டும் என்று எச்சரித்துள்ளனர்.

ஜனவரி 7 முதல் போராட்டங்களின் எண்ணிக்கையும் தீவிரமும் அதிகரித்துள்ளதாக "போர் ஆய்வு நிறுவனம்" தெரிவித்துள்ளது.

நிலைமையைக் கட்டுப்படுத்த குறைந்தது ஒரு மாகாணத்திலாவது புரட்சிகர காவல்படையின் தரைப் படைகளை அரசு களமிறக்கியுள்ளது.

போராட்டங்கள் காரணமாக ஈரான் முழுவதும் இணையச் சேவை முடக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து மாறுபட்ட தகவல்கள் வருகின்றன.

அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு 28 பேர் கொல்லப்பட்டனர் என கூறுகிறது, ஆனால் பிற மனித உரிமை அமைப்புகள் இந்த எண்ணிக்கை 40 இற்கும் அதிகம் என்று தெரிவிக்கின்றன.

ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான அமெரிக்க மற்றும் ஐரோப்பியத் தடைகளால் அந்நாட்டுப் பொருளாதாரம் பல ஆண்டுகளாகப் பெரும் அழுத்தத்தில் உள்ளது.

2025 ஆம் ஆண்டில் ஈரானிய நாணயம் அமெரிக்க டொலருக்கு நிகராக தனது மதிப்பில் பாதியை இழந்தது. டிசம்பர் மாதத்தில் மட்டும் பணவீக்கம் 42 சதவீதத்தைத் தாண்டியுள்ளது.

தொடக்கத்தில் நாணய மதிப்பின் வீழ்ச்சியைக் கண்டித்து வணிகர்களால் தொடங்கப்பட்ட இந்தப் போராட்டங்கள், தற்போது பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களுக்குப் பரவியுள்ளன.



# இன்றைய ராசி பலன்கள்- 10.01.2026




இன்று நீங்கள் பதற்றமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்கவைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமையாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள்- 10.01.2026




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் மன உறுதி மற்றும் தைரியம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும். பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.

# 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் செம்பியன்பற்று வடக்கில் கைது

**(மரியசீலன்-திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் இரண்டு கிலோ கேரளாக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் பயணித்த ஓட்டோ ஒன்று விசேட அதிரடிப்படையால் திடீர் சுற்றிவளைத்து மறிக்கப்பட்டது.

ஓட்டோவைச் சோதனை செய்தபோது அதிலிருந்து 2 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. ஓட்டோச் சாரதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் செம்பியன்பற்று வடக்கை சேர்ந்த 19 வயது இளைஞன் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் பிடிபட்ட கஞ்சாவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்..

